www.Padasalai.Net

தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 6

ந.க.எண். 20255/கே5/2024 நாள். .06.2024.

பொருள்: தொடக்கக் கல்வி - முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டம் ஊரகப்பகுதி நிதியுதவிப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்கள் பயனடைய விரிவுபடுத்துதல் - பள்ளிகளை ஆய்வு செய்தல் மற்றும் தயார் நிலை குறித்த புகைப்படங்களை EMIS வலைதளத்தில் பதிவேற்றம் செய்தல் - அறிவுரைகள் வழங்குதல் தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண் 33 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, நாள்:07.04.2023.
2. இவ்வியக்கக இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்:08.03.2024, 07.05.2024 மற்றும் 10.05.2024.

************

முதலமைச்சர் காலை சிற்றுண்டி திட்டம் ஊரகப்பகுதி நிதியுதவிப்பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/ மாணவியர்கள் பயனடைய விரிவுபடுத்துதல் சார்ந்து, பார்வை (2) இல் கண்டுள்ள இவ்வியக்கக செயல்முறைகளின் படி உரிய அறிவுரைகள் ஏற்கனவே வழங்கப்பட்டது. தற்போது, மேற்கண்ட பள்ளிகளை ஆய்வு செய்வது குறித்தும் மற்றும் தயார் நிலை குறித்த புகைப்படங்களை கல்வியியல் மேலாண்மை தகவல் மையத்தின் (EMIS) வலைதளத்தில் பதிவேற்றம் செய்வது குறித்தும் கீழ்க்கண்ட அறிவுரைகளை பின்பற்றி செயல்பட அறிவுறுத்தப்படுகிறது.

1. தங்கள் வருவாய் / கல்வி மாவட்டத்தில் முதலமைச்சர் காலை சிற்றுண்டித்திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ள ஊரக நிதியுதவிப்பள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப வட்டாரக்கல்வி அலுவலர்கள் / வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் அடங்கிய குழுக்களை அமைக்க வேண்டும்.
2. ஒவ்வொரு குழுவிற்கும் ஆய்வு செய்ய வேண்டிய பள்ளிகள் சமமாக பிரித்து அளிக்கப்பட வேண்டும்.
3. குழுவினர் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பள்ளிகளுக்கு நேரடியாக சென்று ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு நான்கு (4) புகைப்படங்கள் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

Scanned with OKEN Scanner

www.Padasalai.Net

i. காலை சிற்றுண்டி தயாரிப்பதற்கான அறை ஒதுக்கப்பட்டிருப்பதை உறுதி செய்து அறையின் முன்புற புகைப்படம் ஒன்று பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

ii. காலை சிற்றுண்டி உறுதி செய்து அறையின் உட்புற புகைப்படம் ஒன்று பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்

iii. காலை சிற்றுண்டி தயாரிப்பதற்கான அறையின் மின்சார வசதி, குடிநீர் வசதி மற்றும் பொருட்கள் வைப்பறை ஆகியவற்றின் தயார் நிலை குறித்த புகைப்படம் ஒன்று பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்

iv. மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்குவதற்கான தட்டு, டம்ளர் , அமருவதற்கான பாய், சமுக நலத்துறையால் வழங்கப்படும் எரிவாயு இணைப்பு மற்றும் சமையல் பாத்திரங்கள் உள்ளிட்டவற்றை உறுதி செய்து புகைப்படம் ஒன்று பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்

மேற்கண்ட அறிவுரைகளை பின்பற்றி 19.06.2024 முதல் 21.06.2024 வரையிலான நாட்களுக்குள் ஆய்வு மற்றும் புகைப்படத்தினை கல்வியியல் மேலாண்மை தகவல் மையத்தில் (EMIS) பதிவேற்றம் செய்து பணியினை முழுமையாக முடித்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக்கல்வி) அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஒ/ம)

தொடக்கக் கல்வி இயக்குநர்

18/06/2024

பெறுநர்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக்கல்வி)

(மின்னஞ்சல் மூலம்)

Scanned with OKEN Scanner